பதிவங்கள் : பதிது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 26 புதன்கிழமை (12.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 286

## இலகு ரக விமானங்கள், குண்டு துளைக்காத வாகனம் உட்பட

# புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றி வந்த 3 கப்பல்களை கடற்படை மூழ்கடிப்பு

## கொழும்பில் அரசு அறிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர்12


விடுதலைப் புலிகளுக்கு ஆயுத தளபாடங்களை ஏற்றிவந்தவை எனக் கூறப்படும் மூன்று பெரிய கப்பல்களை இலங்கைக் கடற்படை தாக்கி அழித் திருப்பதாக அரசாங்கத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலகுரக விமானங்கள் மற்றும் பெருமளவு ஆயுதங்களை ஏற்றிவந்த புலிகளின் கப்பல்களே தகர்க்கப்பட்டன என்றும் -

இந்தக் கப்பல்கள் தகர்க்கப்பட்டதோடு புலிகளின் கப்பல்களின் அணியே முற்றாக அழிந்து விட்டது என்றும் இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

திங்கள் இரவு முதல் நேற்று அதிகாலை வரை தெற்குக் கடலில் இடம்பெற்ற தாக்குதல் நடவடிக்கையின் மூலம் புலிகளின் இந்தக் கப்பல்களைக் கடற்படையினர் மூழ்கடித்தனர் என்று இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வஸந்த கரன்னகொட கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

புலிகளிடம் இதுவரை இருந்து வந்த பத்துப் பெரிய கப்பல்களில் ஒன்றைத் தாங்கள் அழித்து விட்டனர் என்றும், அதன்பின் இப்போது புலிகளிடம் ஒரேயொரு கப்பல் மட்டுமே எஞ்சியிருக்கின்றது. (10 ஆம் பக்கம் பார்க்க)



எரியும் கப்பல் ஒன்று குறித்து பாதுகாப்புத் தரப்பு வெளியிட்ட படம்.

# மனிதநேயப் பேரணிகள் நேற்றிரவு இராமேஸ்வரம், நாகபட்டினம் சேர்ந்தன

## இரு இடங்களிலும் காவல்துறையினரும், கடற்படையினரும் குவிப்பு

சென்னை, செப்.12

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான மனித நேயப் பணிக்கு - படகுப் பயணத்துக்கு - ஆதரவான, அதற்கு முன்னோடியான பேரணிகள் நேற்று இராமேஸ்வரத்தையும் நாகபட்டினத்தையும் சென்றடைந்தன. குடாநாட்டு மக்களுக்கென்று சேகரிக்கப்பட்ட உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் முக்கிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் இருந்து எடுத்துச்சென்ற ஊர்திகளும், தொண்டர்களும், ஆதரவாளர்களும் கொண்ட பேரணிகள் நிர்ணயித்தவாறு நேற்று இரவு 7 மணியளவில் துறைமுகப் பட்டினங்களான இராமேஸ்வரத்தையும் நாக பட்டினத்தையும் சென்றடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை - இரு துறைமுகப் பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையில் காவல்துறையினரும் கடற் படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

நாகபட்டினத்தில் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் தலைமையில் தமிழ்த் தேச பொதுவுடமைக் கட்சியின் செயலாளர் மணியரசன், தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர் தியாகு ஆகியோர் கலந்துகொள்ளும் மாபெரும் எழுச்சிப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

அங்கு பழ.நெடுமாறன், மணியரசன், தியாகு ஆகியோரின் விளக்கவுரை இடம் பெற்றது. இராமேஸ்வரத்தில் தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் பரந்தாமன் தலைமையில் விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் தொல.திருமாவளவன் கலந்துகொள்ளும் மாபெரும் எழுச்சிப் பேரணி நடத்தப்பட்டது.

இதனால் இராமேஸ்வரம் மற்றும் நாக பட்டினம் பகுதிகள் பெரும் பரபரப்புடன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டக்கச்சியில் குண்டு வீச்சு!

கொழும்பு, செப்.12

கிளிநொச்சி வட்டக்ச்சிப் பகுதியில் நேற்றுக்காலை விமானப்படையினரின் 4 கிபிர் விமானங்கள் தொடர்ச்சியாக குண்டு மழை பொழிந்திருக்கின்றன. முதலில் காலை 8.30 முதல் 8.45 வரையிலும், பின்னர் இரண்டாவது தடவையாக காலை 9 மணிக்கும் இத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்தத் தாக்குதலினால் அப்பகுதிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதுகாப்புத் தேடி அங்கும் இங்கும் ஓடினர் எனத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்த நோயாளிகள் பலர் தமது உயிருக்கு அஞ்சி சிதறி ஓடினர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

நேற்றைய தாக்குதலினால் கிளிநொச்சி நகரத்தில் மக்களின் அன்றாட நடவடிக்கை (10 ஆம் பக்கம் பார்க்க)

## வதிரிச் சந்தியில் புதிய முகாம்

யாழ்ப்பாணம்,செப். 12

கரவெட்டி, வதிரிச்சந்தியில் புதிய முகாம் ஒன்றைப் படையினர் அமைத்து வருகின்றனர்.

அந்தப் பகுதியில் மாடிக் கட்டடம் ஒன்றில் காவலரண் அமைத்து தங்கியிருந்த படையினர் அங்கு நிரந்தரமாக முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வாள், கத்தி, பொல் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி முயற்சிகளுக்கு உதவுவதற்கு நோர்வே இன்னமும் தயார்

ஒஸ்லோ,செப்.12

இலங்கையில் அமைதியைக்கொண்டு வருவதற்கான முயற்சிகளில் உதவுவதற்கு நோர்வே இன்னமும் தயாராகவே உள்ளது.

சிறிலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுக்குத் தயாரானால் அதற்கு உதவுவதற்கு நாமும் எப்போதும் தயா ராகவே உள்ளோம்.

இவ்வாறு நேற்று இங்கு நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில்வைத்து அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்தார்.



அமைதி முயற்சிகளில் ஈடுபடும் சந்தர்ப்பம் உருவாகும் பட்சத்தில் எந்த நேரத்திலும் ஸ்ரீலங்கா செல் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவுடன் புதுடில்லி விரிவான பேச்சு நடத்தும்

கொழும்பு, செப்.12

இந்தியத் தரப்பின் அழைப்பை ஏற்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று இந்தியா பயணமானார். புதுடில்லியில் முக்கிய அரசியல் பேச்சுகளில் அவர் ஈடுபடுவார் எனத் தெரியவருகின்றது.

இதேசமயம், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தேச புதுடில்லிப் பயணம் தாமதமாகலாம் என்றும் தெரிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியத் தரப்பின் அழைப்பை ஏற்றே அங்கு செல்கின்றார் என்பது குறித்து உத்தியோகபூர்வமான அறிவித்தல் ஏதும் வெளியாகவில்லை.

எனினும், புதுடில்லி அரசியல் தலைமை (10 ஆம் பக்கம் பார்க்க)

## 5ஆசிரியர் சங்கங்கள் அடையாள வேலை நிறுத்தம்; தமிழர் ஆசிரியர் சங்கம் பங்கு கொள்ளாது

கொழும்பு, செப். 12

சம்பளத்தை அதிகரிக்கக் கோரி அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், கல்வி உத்தியோகத்தர்களின் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், மனையியல், விவசாய டிப்ளோமா ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நாளை அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ள அழைப்பு விடுத்துள்ளன.

எனினும் - ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்கக் கோரி 5 ஆசிரியர் சங்கங்கள் இணைந்து நாளை நாடு முழுவதும் மேற்கொள்ளவிருக்கும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்குகொள்வதில்லை என இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் திட்டவட்டமாகத் தீர்மானித்திருக்கிறது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அசத்யோ நிர்வாண தீசஷா ஆசார்யாபிஷேக விஞ்ஞாபனம் 13.09.2007

*பேரன்புடையீர்!*

நிகழும் விஸ்வாதி ஸ்ரீ ஷர்வதித்தி வருடம் தெஷிணாயணம் ஆவணி மாதம் 27ஆம் நாள் நாளை (13.09.2007) வியாழக்கிழமை அத்த நட்சத்திரம் கன்னி லக்கினமும் வளர் துதியை திதியும் கூடிய காலை 6.28 - 8.15 வரையுள்ள சுபயோக சுபமுகூர்த்தத்தில் காசிவ கோத்திரத்தை சேர்ந்த

**சிவஸ்ரீ கார்த்திகேசு ஐயர் - பிரம்மஸ்ரீ புவனேஸ்வர சார்மாவுக்கு**

அசத்யோ நிர்வாண தீசஷா ஆசார்யாபிஷேகம் செய்து வைப்பதற்கு எல்லாம்வல்ல மாணிக்க விநாயகப் பெருமானின் திருவருளும் குருவருளாக்ஞையும் கைகூடியுள்ளமையினால் மேற்படி வைபவம்.

உடுவில் தெற்கு மாணிக்கப்பிள்ளையார் கோயில் - மானிப்பாய்
ஆலயத்தில் நடைபெற உள்ளது.

தீஷாகுரு சிவபிரம்மபதி
கலாநிதி சிவருத்தியானந்த
சிவாச்சாரியார் சிவஸ்ரீ நித்தியானந்த குருக்கள்
சங்கானை

அத்தருணம் தாங்களும் இவ்வைபவத்தில் கலந்து நிகழ்வை சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

உடுவில் தெற்கு,
மாணிக்கப் பிள்ளையார் கோயில்,
மானிப்பாய். (64727)

தங்கள் நல்வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ கா. புவனேஸ்வர சர்மா
சத்தியபாமா தம்பதிகள்.

## தவறிவிட்டது

இராமலிங்கம் வீதி, உடுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வநாயகம் சந்திராணி என்பவரது தேசிய அ. அட்டை (555422385V), வி. அ. அட்டை (0906006734) என்பன 02.09.2007 அன்று உடுவிலுக்கும் மல்லாகத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ''குருமனை'' உடுவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## மணமகன் தேவை

யாழ். இந்து 61ஆம் ஆண்டு பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை. வெளிநாடு விரும்பத்தக்கது.
தொடர்பு: 0776846203
ந. நந்தகுமார்
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

## மரண அறிவித்தல்கள்



### குணரெட்ணம் கனகரெட்ணம்

*(சிவராசா - இளைப்பாறிய தபாலதிபர்)*

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குணரெட்ணம் கனகரெட்ணம் நேற்று (11.09.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், சந்தானலட்சுமி, கருணாகரன் (UK), திரிபுரசுந்தரம், சிவகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெகாசெந்தில்நாதன் (இளைப்பாறிய அரசாங்க அதிபர்), ஸ்ரீஸ்கந்தன் (தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்), விமலாதேவி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புச் சகோதரனும் திருமதி ஸ்ரீபதி செந்தில்மதி (ஆஸ்திரேலியா), திருமதி வரதன் செந்தில் செல்வி (கனடா), ஸ்ரீதர்ஷன் (யாழ். இந்துக் கல்லூரி உயர்தரம் 2008 - விஞ்ஞானப்பிரிவு), ஸ்ரீதிலக்ஸன் (யாழ். பரியோவான் கல்லூரி), சிவஜீவன் (யாழ். இந்துக் கல்லூரி), புஸ்பாஞ்சலி (யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும், அருணின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*30, ஓடைலேன்,*
*வண்ணார்பண்ணை.* (64778)

தகவல்:
குடும்பத்தினர்.



### திருமதி பரமலிங்கம் இரத்தினம்

*(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)*

யாழ். புங்கன்குளம், 35/9, விபுலானந்த வீதியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட திருமதி இரத்தினம் பரமலிங்கம் 10.09.2007 திங்கட்கிழமை சிவபதமெய்திவிட்டார்.

அன்னார் பரமலிங்கத்தின் (முன்னாள் இ.போ.ச. சாரதி - நெடுந்தீவு) அன்பு மனைவியும், திருமதி நிர்மலாதேவி (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை, ஆஸ்திரேலியா), குலேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், இ.ஜெயராஜா (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்), திருமதி. கு.குண்டலம் ஆகியோரின் அன்பு மாமியும், நிரஞ்சினி, நிரஞ்சன், ரஜீவன், சோபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2007) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் 190/5, முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள அவரது வசிப்பிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*த.செல்வநாயகம்,*
*190/5, 1ஆம், குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (64717)

தகவல்:
சி.பரமலிங்கம் (கணவர்).



### அரியகுட்டி நாகராஜா

*(சைக்கிள் கடை உரிமையாளர் கொக்குவில் சந்தி)*

கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி நாகராஜா நேற்று (11.09.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - செல்லம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும், ருக்குமணியின் அன்புக் கணவரும் நாகரத்தினத்தின் பாசமிகு சகோதரரும் கோசலை, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குகதாஸனின் பாசமிகு மாமனும் பிரவின்ஜாவின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2007) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''விஷ்ணுபதி''*
*சிவகுரு ஒழுங்கை,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (64735)

தகவல்:
குடும்பத்தினர்.



### கதிரவேலு குணம்

பழைய வீதி, கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு குணம் நேற்று (11.09.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - ராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமரர் சின்னத்துரை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் குணசீலன், குணரத்தினம், குணபாலன், குணபாலசிங்கம், குணசேகரம், சந்திரசேகரம், ராஜசேகரம், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயபாலன் (ஹொலண்ட்), ஜெயராஜன் (ஜேர்மனி), ஜெயரட்ணம் (கனடா), புஸ்பலதா, பிறேமலதா, ஜெனிதரன் (AMT) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன், ரவீந்திரன், சக்கிளின் (ஹொலண்ட்), இசைஞானவதனி (ஜேர்மனி), லலிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜெனி, பிரயன், ஜெமிலா (ஹொலண்ட்), சுருதி, ஹரி (ஜேர்மனி), பபிசன், தேனுகா (கனடா), பிருந்தா, நிரோஷன், பிறேமி, மிருத்திகா, பிரவீன், கார்த்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2007) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (64734)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி. சத்தியமதி அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் சின்னட்டி இராசதுரை**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம்,
வலி. மேற்கு, சங்கானை. (64738)

பிரதேச செயலரும்,
அனைத்து
உத்தியோகத்தர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கப் பகுதிநேர ஆங்கில ஆசான்

**அமரர் பதஞ்சலி ஆனந்தமகேஸ்வரன்**

அவர்களின் திடீர் மறைவிற்காக எமது கண்ணீர் அஞ்சலியையும், அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்து அவரது ஆன்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள், உறுப்பினர்கள், பணியாளர்கள், தொண்டர்கள், மாணவர்கள், இலங்கை செஞ்சிலுவை சங்கம், யாழ். கிளை. (சி-53659)

## கண்ணீர் அஞ்சலி

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், யா/ இணுவில் மத்திய கல்லூரி

**பதஞ்சலி ஆனந்தமகேஸ்வரன்**

அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார். இவரது துக்க நிகழ்வில் நாமும் பங்கு கொள்வதுடன், அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆசானின் ஆத்மா சாந்தியடை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(64719) பாடசாலைச் சமூகம், யா/ இணுவில் மத்திய கல்லூரி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1953 ★ 04 ★ 08



மறைவு 2007 ★ 08 ★ 14

### அமரர் முத்தர் சந்திரன் (கிளி)

காலமெல்லாம் உன் அருகில் இருப்பேனென்று
கனிவுடன் எம்மை அணைத்து வாழ்ந்த அப்பாவே!
காலன் அழைத்தவுடன் காற்றாய்ப் பறந்து போனீரோ!
இனி என்று காண்போம் உன் திருமுகத்தை

14.08.2007 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்தியகிரியைகள் நாளை (13.09.2007) வியாழக்கிழமை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (64718)

## ஆயுள்வேத மருத்துவ அதிகாரிகளுக்கு 15 ஆம் திகதி நியமனக் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 12

ஆயுள்வேத மருத்துவ அதிகாரிகளாக நியமனச் செய்யப்பட உள்ளோருக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பு, நாவின்னவில் அமைந்துள்ள ஆயுள்வேத திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட உள்ளது.

ஏற்கனவே ஆயுள் வேத மருத்துவ அதிகாரி நியமனம் சம்பந்தமான நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு சென்றவர்களை யாழ். அரச அதிபருடன் பிரயாண ஒழுங்குகள் சம்பந்தமான தொடர்புகளை மேற்கொண்டு, குறிப்பிட்ட திகதியில் சமுகம் அளித்து நியமனக் கடிதங்களைப் பெற்றுச் செல்லுமாறு வடமாகாண சுதேச மருத்துவத்துறை மாகாணப் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ். துரைரத்தினம் கேட்டுள்ளார். (1-51)

## கத்தி வெட்டுக்கு இலக்காகி மரணம்

யாழ்ப்பாணம், செப். 12

வீட்டிலிருந்தவரை அழைத்து வாசலில் வைத்து கூரிய ஆயுதத்தினால் வெட்டிய சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு எட்டு மணியளவில் சாவக்சேரி கெருடாவில் பகுதியில் இடம்பெற்றது.

காயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த பெரியராசா என அழைக்கப்படுபவரே மரணமானவராவார்.

இவரது மரணம் தொடர்பாக சாவச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)


## விற்பனைக்கு

Lancher - 50, (Japan), Cilver Model CBZ, New Modal குளிர்சாதன பெட்டி, வீட்டுத் தளபாடங்கள் தற்போது நடைமுறையில் இருக்கும் மருந்தகம், குத்தகைக்கு கொடுக்கப்படும்.
இல. 19/1, செட்டித் தெரு ஒழுங்கை. நல்லூர்.
தொ.பே. 0779181018.


## புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானம்

மேற்படி தேவஸ்தானத்திற்குப் பின்வரும் பதவிகளுக்கு இரு பூசகர்கள் தேவைப்படுகின்றனர்.

1. குருக்கள் உதவிப் பூசகர்.
2. பரிசாரகர்.

தகுதியுடையோர் நேரில் வரவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(சி/53475) [illegible],
அறங்காவலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் இணைப்பு வழங்குமாறு கோரி ஒரு வருடமாக அலையும் மக்கள்

யாழ்ப்பாணம்,செப்.12

மின் இணைப்பு வழங்குமாறு கோரி கடந்த ஒரு வருடமாக இலங்கை மின்சார சபை அலுவலகங்களுக்கு தினமும் அலைவதாகப் பொதுமக்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின்மானி பொருத்துமாறு கோரியும் மின்சார சபைக்கு அலைவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மின் இணைப்பை வழங்குவதற்குத் தேவையான உபகரணங்கள் இல்லாததாலேயே இணைப்பை வழங்க முடியாதுள்ளதாக மின்சாரசபை அதிகாரிகள் கூறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏ-9 வீதி மூடப்படுவதற்கு முன்னர் மின்சாரம் வழங்கக் கோரி விண்ணப்பித்த பெரும் எண்ணிக்கையான பொதுமக்களுக்கு இதுவரை மின்விநியோகம் வழங்கப்படவில்லை. அத்துடன் அக்காலப் பகுதியில் மின்மானி இல்லாமல் - மின்விநியோகம் வழங்கப்பட்டவர்களுக்கு இதுவரை மின்மானிகள் பொருத்தப்படவில்லை எனவும் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்போது பெருமளவு பணத்தை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரத் தட்டுப்பாட்டினை கருத்தில் கொண்டு மின்பாவனையைக் குறைத்து பயன்படுத்துகின்ற போதிலும் அதிக அளவு கட்டணம் செலுத்தும் நிலை மின்மானி பொருத்தப்படாத பாவனையாளர்களுக்கு ஏற்படுகிறது. ஏனைய திணைக்களும் சபைகளும் தமக்குத் தேவையான உபகரணங்களைக் கொழும்பிலிருந்து தருவிப்பது போல இலங்கை மின்சார சபையின் வட மாகாண அலுவலகம் மின்மானி மற்றும் மின் இணைப்பு உபகரணங்களை தருவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மின்மானி பொருத்தப்படாது மின்விநியோகம் பெற்ற பல வீடுகளின் உரிமையாளர்கள் மின்விநியோகத்தினை நிறுத்தக் கோரி மின்சார சபை அலுவலகங்களில் கடிதங்கள் வழங்கி வருவதாகவும் கூறப்படுகின்றது. (202-207)




## நாயன்மார்கட்டிலிருந்து யாழ்.நகருக்கு பஸ்சேவை நடத்தக் கோரிக்கை

நல்லூர்,செப்.12

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி நாயன்மார்கட்டிலிருந்து யாழ்.நகருக்கு பஸ்சேவை நடத்த வேண்டுமென நாயன்மார்க்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலையத் தலைவர் எஸ்.மயில்வாகனம் இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாயன்மார்கட்டிலிருந்து யாழ்.நகரப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் போக்குவரத்து மேற்கொள்வதில் பெரும் சிரமப்படுகின்றனர். நாயன்மார்கட்டிலிருந்து முத்திரைச் சந்திவரை நடந்து வந்தே பஸ்ஸில் பயணிக்கக் கூடியதாக உள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, காலையிலும் மாலையிலும் நாயன்மார்கட்டு - யாழ்.நகருக்கு பஸ் சேவை ஒன்றை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (202-111)

## சமாதான தினத்தையொட்டி மாணவரிடையே கவிதைப்போட்டி

யாழ்ப்பாணம்,செப்.12

உலக சமாதான தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் கவிதைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

'கருவாகும் சமாதானக் குழந்தை', 'சமாதானத்தை வேண்டி' ஆகிய தலைப்புகளில் 15-19 வயதுப் பிரிவினருக்கிடையே இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபர்களின் உறுதிப்படுத்தலுடன் தங்கள் ஆக்கங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பி.யோகராஜா, 18 ஏ, முத்துவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அல்லது வ.தங்கவேலாயுதம், 30/10, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கழகத்தினர் கேட்டுள்ளனர். (202)

## ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு நிதியுதவி

நவாலி,செப்.12

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு குழாய் நீர் விநியோகத்தை மேற்கொள்ளவும் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளவும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இரண்டரை லட்சம் ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது.

இதற்கான இணைப்பு வேலைகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருப்பதாக பாடசாலையின் அதிபர் எஸ்.சிவகடாட்சம் தெரிவித்தார். (202-100)

# சின்னக்கடை மீன் சந்தையில் பழுதடைந்த மீன்கள் விற்பனை

### சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

குருநகர்,செப்.12

குருநகர் சின்னக்கடை மீன் சந்தையில் சில வியாபாரிகள் தொடர்ந்து பழுதடைந்த மீன்களை விற்பனை செய்து வருவதாக அங்கு செல்லும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடாக்கடலில் தற்போது பகலில் மட்டுமே மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீனவர்கள் பகல் 12 மணிக்கு பின்பே மீன்களைப் பிடித்து வந்து சந்தைப் படுத்துவது வழமையாக உள்ளது. இதனால் சின்னக்கடை மீன் சந்தை பகல் 12 மணிக்குப் பின்னரே சூடுபிடிக்கிறது. பொதுமக்கள் நண்பகல் 12 மணிக்கு பின்னரே சந்தைக்குச்சென்று அங்குள்ள வியாபாரிகளிடம் உள்ள மீன்களை வாங்கிச் சென்று விடுகிறார்கள். இதனால் 12 மணிக்குப் பின்னர் பிடித்துக் கொண்டுவரப்படும் மீன்கள் விற்கமுடியாமையால் அவற்றை மீன் வியாபாரிகள் குளிரூட்டிகளில் வைத்து மறுநாளே விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள். இதனை அவர்கள் வெட்டி விற்பனை செய்யும் போது பல தடவைகள் தண்ணீரில் கழுவி விற்பதால் அவற்றை உடன் மீன் என நம்பி வாங்கிச் செல்லும் மக்கள் வீடு செல்லும் போது அந்த மீன்கள் பழுதடைந்து விடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குளிரூட்டிகளில் பல நாள்கள் வைக்கப்பட்ட இறால், நண்டு மற்றும் சிறிய மீன்கள் என்பனவும் இவ்வாறு விற்பனை செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இது தொடர்பாக சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கைகளை எடுத்து மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங் களைத் தவிர்ப்பதற்கு உதவ வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(50-57)




இலங்கை வங்கியின் 'கிருஷி நவோதய' திட்டத்தின் கீழ் சுயதொழில் வாய்ப்புக் கடன் வழங்கும் வைபவம் புலோலி ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் பி.ஆனந்தநடேசன் உரையாற்றுவதையும் மன்றத் தலைவர் பி.நடனசபாபதி அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்திலும் -

பருத்தித்துறைக்கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர் எம். பஞ்சலிங்கம் சுயதொழில் முயற்சியாளர் ஒருவருக்கு கடனுக்கான காசோலையை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (160)

# குருநகரில் இராணுவ வைத்தியர்கள் நடத்திய இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,செப்.12

பலாலி வைத்தியசாலையின் வைத்திய குழுவினர் கடந்த சனிக்கிழமை குருநகர் பிரதேசத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தினர்.

யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியின் ஆலோசனை வழிகாட்டலின் கீழ் குருநகர் சென்.றோக்ஸ் றோ.க. பாடசாலையில் நடத்தப்பட்ட இம்முகாமில் பாடசாலை மாணவ, மாணவிகள் உட்பட சுமார் 600 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர் என தலைமையகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முகாமில் குருநகர், பாஷையூர், திருநகர், ஈச்சமோட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டனர்.

கொழும்பிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்று அன்பளிப்புச் செய்த சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுதியான மருந்து வகைகள் இம்முகாமில் வைத்து நோயாளர்களுக்கு வழங்கப்பட்டது - என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

# சண்டிலிப்பாயில் உள்ள இடம்பெயர்ந்தோர் காணி உறுதி பிரதிகளை வழங்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,செப்.12

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து வன்செயல்கள் காரணமாக இடம் பெயர்ந்து வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் வசித்துவரும் குடும்பங்கள் தங்கள் சொந்தக் காணிகளின் உறுதிகளின் பிரதிகளை தாம் தற்போது வசித்துவரும் கிராம அலுவலரிடம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேசமயம், தாம் தற்போது இடம் பெயர்ந்து வசித்துவரும் பிரிவு கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப்படிவம் ஒன்றையும் பெற்றுப் பூர்த்தி செய்து அவரிடம் கையளிக்க வேண்டும் என வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கேட்டுள்ளார்.

வலி.வடக்கு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்து 65 குடும்பங்கள் கடந்த பல வருட காலமாக வலி.தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் இடம் பெயர்ந்து வசித்து வருகின்றன. இவர்கள் உயர் நீதிமன்ற தீர்ப்பினை அடுத்து தங்கள் சொந்த இடங்களுக்கு சென்று மீளக்குடியேறுவதற்கு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-135)

## சாவகச்சேரியில் இலவச ஆங்கில வகுப்புகள்

யாழ்ப்பாணம், செப்.12

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஆரம்பிக்கவுள்ளனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த வருடம் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும் -


தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாக கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஏற்கனவே நடத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்ட ஆங்கில பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டோர் அன்றையதினம் பயிற்சி வகுப்புகளுக்கு வருகை தருமாறு கேட்டுள்ளார். (202-207)

## உதவிப் பணக் கொடுப்பனவு

வலிதென்மேற்கு,செப்.12

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவு எதிர்வரும் சனிக்கிழமை முதல் தபாலகங்கள் மூலம் வழங்கப்படவுள்ளது. (202-135)




நவாலி,செப்.12

வட்டுக்கோட்டைப் பிரமணாட்சித் தோட்டம் கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 7ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தேர்த்திருவிழா எதிர்வரும் சனிக்கிழமையும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-100)

* * *

வலி.தென்மேற்கு,செப்.12

பண்டத்தரிப்பு, அம்மன் வீதி புனித வேளாங்கன்னி மாதா ஆலய வருடாந்த திருவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு. ஜூட் நிக்சன் அடிகளார் செய்துள்ளார். (202-135)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.12

இந்து கலாசார திணைக்களம் நடத்தும் தர்மாசிரியர் பரீட்சைக்கான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெறும். (202-79-111)

* * *

நல்லூர்,செப்.12

வேலணை சாட்டி மாதா கோயில் பெருந்திருவிழா உற்சவ கால ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஆலயப் பங்குத் தந்தை, இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள், வேலணை பிரதேச சபைப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.

உற்சவம் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது. (202-111)

* * *

வலி.தென்மேற்கு,செப்.12

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் நடத்தும் 2007-2008 காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கட்டுடையிலுள்ள சம்மேளன அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சம்மேளனத் தலைவர் சி.பொ.மா.க.முதலியார் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சண்டிலிப்பாய் கமநலச் சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் வை.பாலகிருஷ்ணன் கலந்துகொள்வார்.

பயிரழிவை ஏற்படுத்தும் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவது, விதை நெல் பெறுவது, உர விநியோகம் ஆகிய பல்வேறு விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது. (202-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் ஆவணித் திங்கள் 26 ஆம் நாள் இன்று (12.09.2007) புதன்கிழமை முற்பகல் 11.47 மணி முதல் பிற்பகல் 2.41 மணிவரையான உத்தர நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய தனுலக்கின சுபமுகூர்த்தவேளையில்



| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| செந்துரான் | தர்ஷிகா |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் துணைகொண்டு திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ்வயமம் அலெக்சாந்திரியா றோட், வெள்ளவத்தை, கொழும்பு-06 எனும் விலாசத்திலுள்ள 'மியாமி' கல்யாண மண்டபத்தில் திருமணம் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தங்கள் அன்புள்ள

வைத்திய கலாநிதி
திரு.திருமதி தெய்வேந்திரன்
36/7, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

J10A, அன்டேசன் தொடர்மாடி,
நாரஹென்பிட்டி,
கொழும்பு 05.

திரு.திருமதி கெங்காதரன்
'சரவணாஸ்'
5, 2ஆம் குறுக்குத் தெரு,
கூமாங்குளம், வவுனியா.

(#1/53549)

உ
கணபதி துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 26 ஆம் நாள் இன்று (12-09-2007) புதன்கிழமை காலை 7.30 மணி முதல் 8.22 மணி வரையுள்ள வளர்பிறை பிரதமை திதியும் அமிர்த்த சித்தயோகமும், உத்தரம் நட்சத்திரமும் கூடிய கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில்



| திரு.திருமதி புவனேந்திரன் | திரு .திருமதி தங்கராசா |
|---|---|
| தம்பதிகளின் புத்திரன் | தம்பதிகளின் சிரேஷ்ட |
| திருநிறை செல்வன் | புத்திரி திருநிறை செல்வி |
| செந்தில்ரூபன் அவர்களுக்கும் | ஜானகி அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு வெள்ளவத்தை ஹோட்டல் சபயர் மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் பகல் போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு .திருமதி புவனேந்திரன்
102, அம்பலவாணர் வீதி, அத்தியடி,
யாழ்ப்பாணம்.
011 - 2506248

திரு .திருமதி தங்கராசா
5 1/4, பிரான்சிஸ் றோட்,
வெள்ளவத்தை.

(இருவீட்டார் அழைப்பு)

(64485)

# திருமண வாழ்த்து

அன்புடையீர்!

மங்களகரமான சர்வசித்து வருடம் ஆவணிமாதம் 26ஆம் நாள் இன்று (12-09-2007) புதன்கிழமை இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் இல்லறவாழ்வில் இணையும்



| கோப்பாய் - இருபாலையைச் சேர்ந்த | உடுவில் - சுன்னாகத்தைச் சேர்ந்த |
|---|---|
| திரு .திருமதி பொன்னையா | திரு .திருமதி குருசாமி |
| தம்பதியரின் புத்திரன் | தம்பதியரின் புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| ரவீந்திரன் | துஸ்சாந்தி |
| அவர்களையும் | அவர்களையும் |

இல்லறநெறி சிறந்தோங்க, இறையருள் ஒளி வழிகாட்ட நல்லமனத்தோராய், நானிலம் போற்ற நீடூழிவாழ்க என வாழ்த்துவோர்.

அண்ணாமார் குடும்பம்,
அக்காமார் குடும்பம்,
தங்கை குடும்பம்.

அண்ணா குடும்பம்,
அக்காமார் குடும்பம்.

(64540)

324, Palaly Road, Jaffna.

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்

BIT



## கொழும்பு பல்கலைக்கழகத்தின்

வெளிவாரிப் பட்டப்படிப்பு

## விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

2007இல் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கும், முன்பு விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கும் அரிய சந்தர்ப்பம்

**Diploma in IT >>Higher Diploma in IT >>Degree in IT**

- பரீட்சைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படுகின்றன.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- BIT கற்கையை பயிலும் மாணவர்களுக்கு எமது நிறுவனத்தினால்
  *Microsoft நிறுவனத்தின் Computer Engineer கற்கை நெறிக்கு 50% சலுகைக் கட்டணம்
  *ComTIA நிறுவனத்தின் A+ கற்கை நெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 15-09-2007
விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், நேரில் MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

# After A/L @ IDM

**IDM Computer Studies (Pvt) Ltd.**
**Affiliated University College**
216, Navalar Road, Jaffna. T:P-021-222 9901
www.idm.lk – www.idm.org

மிக குறைந்த கட்டணத்தில் இலங்கை அரசினாலும் சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களைப் பெறுவதற்கு இன்றே இணையுங்கள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**OPEN GATEWAY FOR HIGHER EDUCATION IN - UK**

உங்கள் உயர்படிப்பினை UK சென்று தொடர்வதற்கு திறந்த நுழைவாயில்

| INTERNATIONAL DIPLOMA COURSES | CERTIFICATE COURSES |
|---|---|
| BTEC - Diploma in ICT | @ Java |
| BTEC - Diploma in Business Management | @ Visual Basic |
| BTEC - Diploma in Hardware & Network Technology | @ Internet Technology |
| BTEC - Diploma in Accounting Packages | @ VB.Net |
| | @ Web Designing |
| | @ Auto CAD |

எமது நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளுபவர்கள் தாம் விரும்பும் பட்சத்தில் எமது 45 கிளை நிறுவனங்களில் விரும்பிய கிளைக்கு இடம் மாறி படிப்பினை தொடர முடியும்.

**HND**
- Software Engineering
- Computing
- Business Information Technology

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 13.09.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ராஜீவ், நவாலி றோட், ஆனைக்கோட்டை.
- திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.
- மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(64713)

தொ.பே.இல.222 3529, 222 2867

## 'மொடேன் ஸ்ரைல்ஸ்' MODERN STYLES

பெண்களுக்கான சகலவிதமான ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும். தையல் பயிற்சிகளும் நடைபெறுகின்றன. புதிய வகுப்புகளுக்கும் ஓடர்களுக்கும் நாடவேண்டிய இடம்.

இல.10 [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: [illegible]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 21.03.1948

உதிர்வு 24.08.2006

## அமரர் அப்புத்துரை அழகராசா

அன்பின் சிகரமே! எம் குடும்பத்தின் திருவிளக்கே!
பண்புக்கோர் இலக்கணமான பாசத்தின் உறைவிடமானவரே
நன்னெறி தவறாத நேர்மையான உத்தமரே!
நாம் எல்லாம் செழிப்போடும், மதிப்போடும், சிரிப்போடும்
வாழ்வதற்கு வித்திட்ட வித்தகரே!
நீங்கள் மறைந்துதான் ஓராண்டு சென்றதே தவிர
எங்கள் மனதை விட்டு ஒருபோதும் நீங்கள் மறையவில்லை
நித்தமும் உங்களை நினைத்து கண்ணீர்க் காணிக்கை செலுத்துகிறோம்.

உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

திருநாவலூர்,
புத்தித்துறை.

(64679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.கொட்டடி நமசிவாயம் வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற சு.நடராசலிங்கத்தின் சேவையைப் பாராட்டி அண்மையில் நடைபெற்ற விழாவில் கொட்டடி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த பெ.செல்வராசா மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம் - லக்ஸ்மன்)



ஊரெழு கணேச வித்தியாசாலை மாணவர்களின் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து யாழ்.வலயத் தமிழ்த்தின போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. கூத்தில் பங்குபற்றிய மாணவர்களையும் நெறியாழ்கை செய்த பாடசாலை ஆசிரியர் எஸ்.சிவகுமாரையும் படத்தில் காணலாம். (72)



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் 2007ஆம் ஆண்டுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலய முன்னாள் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் மாணவி ஒருவருக்கு சின்னம் சூட்டுவதையும் அருகில் அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம்.



சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற தமிழ் மொழி செயற்பாட்டுப் பட்டறையினை தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.முத்துலிங்கம் நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் தமிழ் வளர்த்த பெரியார்கள் வேடத்தில் உள்ள மாணவர்களுடன் அதிபர் ஆசிரியர்களையும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர்களையும் படத்தில் காணலாம். (207)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை உயர் வகுப்பு மாணவிகளின் வெளியீடான "ஒளியை நோக்கி" சஞ்சிகை வெளியீட்டு விழாவில் ஆசிரியை திருமதி எஸ்.சிவானந்தன் ஆய்வுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.(160)

### கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்

# தமிழ்க் கைதிகள் 58 பேரையும் பிரமுகர் குழு நேரில் சந்திக்கும்

கொழும்பு,செப்.12

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும 58 தமிழர்களை, கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்பார்வை செய்யும் குழு இந்த வாரம் நேரில் சென்று பார்வையிடவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பூஸாவிற்குச் சென்று அங்கு நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ அரசியல் கைதிகளின் நிலைமையைப் பார்வையிட்ட இக்குழு, கொழும்பில் தடுத்து வைகைபட்டிருக்கும் 58 கைதிகளையும் இந்த வாரம் பார்வையிடுவதென்று தீர்மானித்துள்ளது.

இந்த 58 கைதிகளைச் சென்று பார்வையிட்டதன் பின் இக்கைதிகளின் நிலைமை தொடர்பாகவும் பூஸா கைதிகளின் நிலைமை தொடர்பாகவும் இக்குழு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து விரிவாக எடுத்துக் கூறும் என்று தெரியவருகின்றது. (சி)

# வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றத்தில் நேற்றுப் பெருந்திரளான பக்தர்கள்

உடுப்பிட்டி,செப்.12

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழா நேற்று பெருந்திரளான பக்தர்கள் புடைசூழ கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

முற்பகல் 10.25 மணிக்கு ஆலய உள் கொடித் தம்பத்தில் அர்ச்சகர் குழாமின் வேத மந்திர ஓதுதலுடன் கொடியேற்றம் நடைபெற்றது.

கோபுர உச்சியில் முற்பகல் 10.40 மணிக்கு கொடியேற்றப்பட்டது. தொடர்ந்து அர்ச்சனைகள் இடம்பெற்றன.

கொடியேற்ற நிகழ்வில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

தொலைவில் இருந்து வந்தவர்கள் தமது பசியாற அன்னதான மடங்களில் அன்னதானமும் வழங்கப்பட்டது. (202-155-160)

# படையினர் எடுத்துச் சென்ற மோட்டார் சைக்கிள் சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.12

நாவற்குழியில் கடந்த வாரம் படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் படையினரால் ஒப்படைக்கப்பட்டது.

படையினரால் கொண்டுசெல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் மீள [illegible]படவில்லையென அதன் உரிமை[illegible] பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து நீதிவான் பலாலி கட்டளைத் தளபதிக்கு அழைப்பாணை அனுப்பியிருந்ததாகவும் அதன் பின்னர் மோட்டார் சைக்கிள் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

# விலைப்[illegible]டியல் காட்சிப்படுத்த 24ஆம் திகதி வரை நீதிமன்றம் காலக்கெடு

யாழ்ப்பாணம்,செப்.12

வர்த்தக நிறுவனங்களில் அத்தியாவசியப் பொருள்களின் விலைப்பட்டியல்களை காட்சிப்படுத்துவதற்கு யாழ். நீதிமன்றம் காலக்கெடு விதித்துள்ளது.

விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டில் இரு வர்த்தகர்கள் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளால் ஆஜர் செய்யப்பட்டனர்.

இருவருக்கும் தலா 3ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சகல வர்த்தக நிலையங்களிலும் எதிர் வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தவேண்டும் என்றும் -

இக்காலக்கெடுவுக்குள் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் என்றும் - நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தக் காலக்கெடு குறித்து அரச அதிபருக்கு அறிவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (1)

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பார்க் நிறுவனம் சுயதொழிலுக்கு உதவி

கட்டைவேலி,செப்.12

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை மூர்க்கம் கரையோரப் பகுதியிலுள்ள 25 பெண்களுக்கு கோழி வளர்ப்புக்கான உதவிகளை பார்க் நிறுவனம் வழங்கியுள்ளது.

தலா ஒரு கோழிக்கூடு, 25 கோழிக்குஞ்சுகள், 25 கிலோ கோழித்தீன், கோழிகளுக்கு உணவு வைக்கும் பாத்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன.

சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக கோழிவளர்ப்புக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் -

ஆரம்ப கட்டமாக கோழிவளர்ப்பு தொடர்பான பயிற்சிகள் பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்டன என்றும் - தெரிவிக்கப்பட்டது. (202-160)

# மேர்வின் சில்வாவின் மகன் கைதாகி விளக்கமறியலில்!

கொழும்பு,செப்.12

கொழும்பு பம்பலப்பிட்டி, டுப்[illegible]கேஷன் வீதியில் உள்ள கேளிக்கை விடுதி ஒன்றில் வைத்து சமிந்த சேனசிங்க என்ற கணக்காளரைத் தாக்கிக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

அவரை இன்றுவரை விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு பிரதம நீதிவான் குசல ச[illegible]ஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

ஏற்கனவே, இதேபோன்று கேளிக்கை விடுதி ஒன்றில் அட்டகாசம் பண்ணி, ஆள்களைத் தாக்கி, அராஜகம் புரிந்த குற்றச்சாட்டை நீதிமன்றில் மாலக சில்வா ஒப்புக் கொண்டதை அடுத்து, நீதிமன்றம் அவரை எச்சரித்து விடுதலை செய்தது [illegible] ஒரு வருட காலத்தை அவருக்கு நன்னடத்தை வேளையாகவும் பிறப்பித்திருந்தது.

அந்த ஒரு வருட காலம் அடுத்த நவம்பர் மாதம் முடிவடைய முன்னரே, அதே போன்று பிறிதொரு கேளிக்கை விடுதியில் வைத்து பிஸ்டலால் ஒருவரைத் தாக்கிப் படுகாயப்படுத்திய சந்தேகத்தில் மாலக சில்வா கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

கடந்த வியாழக்கிழமை இரவு இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்தது. தாக்குதலுக்கு உள்ளானவர் பற்றிய வீடியோப் படங்களும் செய்திகளும் ஊடகங்களில் பரபரப்பாக வெளியான பின்னணியில் மாலக சில்வா கைது செய்யப்படுவதில் காட்டப்பட்ட தாமதம் மக்கள் மத்தியில் அதிருப்தியை எழுப்பியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்சவ காலத்தையொட்டி குமுதினி விசேட சேவை

யாழ்ப்பாணம், செப்.12

சாட்டி மாதா தேவலாய உற்சவத்தை யொட்டி குமுதினி படகு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு நெடுந் தீவிலிருந்து புறப்படும்.

வழமையாக 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்படும் குமுதினி படகு அன்றைய தினம் மட்டும் 6 மணிக்கு புறப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார். (202)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி நித்திலா தர்மசீலன் அவர்களின் தந்தையும், ஆங்கில ஆசானுமாகிய

**அமரர் பதஞ்சலி ஆனந்தமகேஸ்வரன்**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கோண்டாவில் இந்து ம.வி.

(64715)

# நுகர்வோர் அதிகார சபைத் தலைவர் நீதிமன்றை அவமதித்துக் குற்றமிழைப்பு

## உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அறிவிப்பு

கொழும்பு, செப். 11

நுகர்வோர் அதிகாரசபைத் தலைவர் சட்டத்தரணி சரத் விஜேசிங்க உயர்நீதிமன்றத்தை அவமதித்துக் குற்றத்தை இழைத்துள்ளார் என்று உயர்நீதிமன்றம் முடிவு செய்திருக்கின்றது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா, சலீம் மார்சூக் ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்தத் தீர்மானத்தை நேற்று முன்தினம் எடுத்தது.

இக்குற்றத்துக்கான தண்டனையை உயர்நீதிமன்றம் 24 ஆம் திகதி வெளியிடும் என்றும் அறிவிக்கப்பட்டது.

விலை அதிகரிப்புத் தொடர்பாக 'லாவ்' எரிவாயு நிறுவனம் தாக்கல் செய்த மனு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதை ஒட்டி நீதிமன்றுக்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த விடயத்தில் உயர் நீதிமன்ற வழிகாட்டல்கள் தொடர்பாக அமைச்சரவையைத் தவறாக வழிநடத்தி, நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவர் குற்றம் இழைத்துள்ளார் என உயர்நீதிமன்றம் முடிவு செய்கின்றது என பிரதம நீதியரசர் அறிவித்தார்.

**தலைவர் மயங்கிச் சரிந்தார்**

நீதிமன்றத்தில் அச்சமயம் பிரசன்னமாகியிருந்த நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவர் சரத் விஜேசிங்க, நீதியரசர்களின் இந்த அறிவிப்பை அடுத்து நீதிமன்றத்தில் மயங்கிச் சரிந்தார்.

ஒருவாறு ஆசுவாசப்படுத்திய பின்னர் எழுந்த அவர், உயர் குருதி அமுக்கம் தமக்கு இருப்பதால் தாம் இவ்வாறு மயங்கிச் சரிந்தார் என நீதிமன்றத்திடம் குறிப்பிட்டார்.

''இத்தகைய காட்சிகள் நீதிமன்றத்துக்குச் சாதாரணமானவை'' - என்று குறிப்பிட்ட பிரதம நீதியரசர், ''இவ்வாறான உயர் குருதி அமுக்கம் உடையவர்களுக்கு இத்தகைய பொறுப்பான பதவிகள் பொருத்தமற்றவை. அதை அவர்கள் துறந்து விடுவதே நல்லது.'' - என்று கருத்து வெளியிட்டார்.

அதை ஏற்றுக்கொண்ட சரத் விஜேசிங்க, தாம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவர் பதவியைத் துறக்கிறார் என நீதிமன்றுக்குத் தெரிவித்தார்.

அவர் இழைத்த தவறுக்கான தண்டனை குறித்து எதிர்வரும் 24 ஆம் திகதி நீதிமன்றம் அறிவிக்கும் எனப் பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

இதேசமயம், 'டயலொக்' ரி.வியின் செய்மதி ஒளிபரப்பு நடவடிக்கைகளை நிறுத்துமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை விடுத்த உத்தரவுக்கு எதிராக 'டயலொக்' ரி.வி. நிறுவனம் தாக்கல் செய்த மனுவும் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

''மக்களின் அன்றாடப் பாவனையோடு சம்பந்தப்பட்ட பல விவகாரங்களில் சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றைக் கவனிப்பதை விடுத்து செய்மதி ஊடான ஒளிபரப்புக் குறித்து ஆராய வானத்துக்குச் செல்கிறார்கள் இவர்கள்'' - என்று பிரதம நீதியரசர் சாடலாகத் தெரிவித்தார்.(உ - 06)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 27 ★ 07 ★ 1956

மறைவு 13 ★ 08 ★ 2007

**திருமதி புஸ்பமலர் செகராசா**

கடந்த 13.08.2007 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (12.09.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர் : செகராசா,
பிள்ளைகள் : தர்சினி, பிரேமளா,
மருமகன் : ராஜ்ராஜன்

நாகபூசணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (64714)





ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ நறுமணி நகைகள்
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



10.09.2007 அன்று காலமான எமது பாடசாலையின் ஆசிரியை

**திருமதி யமுனா இன்பகரன்**

திடீர் மறைவையிட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## நீங்காத நினைவுகளில் இரண்டாம் ஆண்டு



அமரர்

**தம்பையா தம்பி**

பிறப்பு 02.07.1939

இறப்பு 04.09.2005

ஈராண்டுகள் சென்றாலும்
ஈரவிழிகளுடன்
எதிர்பார்த்து ஏங்குகின்றோம்
வீரநடைபோட்டு
வந்திங்கு பிறவாயோ?

விழிசிட்டி,
ஏழாலை. (64692)

தகவல்:
குடும்பத்தினர்.


## அறைகள் வாடகைக்கு உண்டு

தாதியர், மருத்துவபீட மாணவிகளுக்கு தங்குமிட அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 828, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777 283810

## DECIDE YOURSELF

**Mother Boards**

| | |
|---|---|
| Asus Intel P5PE-VM | 7950/- |
| Asus Intel 945 DDR2 | 10950/- |
| Asrock Intel 945 DDR2 | 9250/- |
| Intel Foxcon 945 DDR2 | 8500/- |
| Intel Foxcon 946 DDR2 | 11900/- |
| Intel Original 9900/-,11500/- | 17750/- |

**Memories**

| | |
|---|---|
| Kingston DDR1 256Mb | 3250/- |
| Kingston DDR1 512Mb | 4900/- |
| Kingston DDR2 256 Mb | 2100/- |
| Kingston DDR2 512 Mb | 3650/- |

**Hard Disks**

| | |
|---|---|
| 80 GB Sata / IDE 3.0Gbps | 6600/- |
| 160 GB Sata 3.0 Gbps | 8400/- |
| 250 GB Sata 3.0 Gbps | 10900/- |

**Monitors**

| | |
|---|---|
| Intex 15" Digital CRT | 13750/- |
| ViewSonic 15" CRT | 14900/- |
| HP 17" Digital CRT | 17500/- |
| Daewoo 15" LCD | 23600/- |
| Panora 17" LCD | 26250/- |
| Daewoo 17" LCD | 26900/- |
| ViewSonic 17" LCD Wide | 27900/- |

**Display Device**

| | |
|---|---|
| GeForce 6500/256Mb | 6950/- |
| GeForce 7300LE/256Mb | 8750/- |
| ATI Radeon 9550/128Mb | 5900/- |

**COMPLETE PC OFFER**
Price From 39900
3 Years Warranty
FREE Flash/UPS
Conditions apply
மேலதிக சலுகைகள், கேள்விகள் நேரில்
வடமராட்சி மற்றும் தென்மராட்சியில்
UNIT
347, K.K.S Road, Jaffna
Ph:021-4590720


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

எங்கள் இதய தெய்வத்திற்கு கண்ணீர் மலரால் காணிக்கை



தோற்றம் 12 - 06 - 1903

மறைவு 29 - 08 - 2000

**திருமதி பொன்னப்பா இராசம்மா**

திதி: அமாவாசை பின் உரை(12.09.2007)

பிள்ளைகளை அன்பாக அரவணைத்து
அறிவெனும் ஊட்டி வளர்த்த தெய்வமே!
அன்பையும் பண்பையும் இறைபக்தியையும்
ஊக்குவித்த தெய்வமே!
உங்கள் தாய் - தந்தை இலட்சியங்களை கேட்டு நடந்தவரே!
எல்லாம்வல்ல இறைவனை நினைவில் வைத்து நினைவுகூரும்:

மகன், மகள்,
மருமகன், மருமகள்,
பேரன், பேர்த்தி,
பூட்டன், பூட்டி.

பொ.சுப்பிரமணியம்
இல. 4,
புதிய இல.10,
செட்டித்தெரு, நல்லூர்.

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் மழலையாய் 12 ★ 06 ★ 1979

விண்ணில் தெய்வமாய் 12 ★ 09 ★ 1995

**அமரர் சிறிஸ்கந்தராஜா ரமேஷ்குமார்**

(யாழ்.யூனியன் கல்லூரி ஆண்டு 11 மாணவன்)

ஒன்றாக நாமிருந்து வாழ்ந்த காலமெல்லாம்
மண்ணோடு மண்ணாகப் போனதடா
வாழும் வயதினிலே வழிமாறிய பயணம் ஏனடா
உன் எதிர்காலங்களெல்லாம் கனவுகளாகப் போனதடா
எல்லோர் மனதிலும் ஆழமாய் பதிந்த பின்
நீ மட்டும் மின்னலாய் சென்றதேனடா
ஆண்டுகள் பன்னிரண்டானாலும் உன் நினைவுகள்
எப்போதும் எம் இதயத்தில் துடித்துக் கொண்டிருக்கும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை. (64385)

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரதிநிதித்துவத்தைப் புறக்கணித்தே கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் நடக்கின்றன

## மட்டு. மாவட்ட நான்கு எம்.பிக்கள் கூட்டாக அறிக்கை

கொழும்பு,செப்.12

''கொலை அச்சுறுத்தல்கள் காரணமாகவே நாம் எமது மாவட்டத்தில் தங்கியிருந்து மக்களுக்குச் சேவை செய்யமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில், எம்மைப் புறக்கணித்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரச உயர்மட்டக் கூட்டம் அரசின் அலட்சியப் போக்கை வெளிப்படுத்துகின்றது.''

- இவ்வாறு தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை மட்டு.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரி. கனகசபை, கே. தங்கேஸ்வரி, எஸ்.ஜெயானந்த மூர்த்தி பி. அரியநேத்திரன் ஆகியோர் அனுப்பியுள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எமது மாவட்ட மக்களின் பிரதிநிதிகளாக மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். நாங்கள் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் எமது மாவட்டத்தில் தொடர்ச்சியாகத் தங்கியிருந்து மக்களுக்குச் சேவைசெய்து வந்தோம். ஆனால், பிற்பட்ட காலத்தில் எமக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் மாவட்டத்தில் தங்கியிருந்து மக்களுக்குச் சேவை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இந்த அச்சுறுத்தல், ஆயுதக்குழு மற்றும் அரச படைகளால் ஏற்பட்டது. எமது இந்த நிலையை மக்கள் நன்கு அறிவார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிடவும், அவர்களின் நலன்களைக் கேட்டறியவும் நேரடியாகச் செல்ல நாங்கள் எடுத்த அத்தனை முயற்சிகளும் அரசின் திட்டமிட்ட செய்கையால் தடுக்கப்பட்டது. அது மாத்திரமன்றி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் எமது ஆலோசனையின் பேரில் கொழும்பில் நடத்துவதற்கு இந்த வருட ஆரம்பத்தில் முடிவெடுக்கப்பட்ட போதிலும், பின்னர் அபிவிருத்திக் குழுத் தலைவரும் அமைச்சருமான அமீர் அலி தனது தனிப்பட்ட முறையில் எம்மிடம் எந்தவித ஆலோசயையும் பெறாமல் மட்டக்களப்புக் கச்சேரியில் நடத்த முடிவெடுத்தார். அதன்படி கூட்டமும் நடைபெற்றது.

### அமைச்சர் ஒருவரை நம்பிச் செயற்பட முடியாது

எமக்கு எமது மாவட்டத்திற்குச் சென்று வரமுடியாத நிலையும், பாதுகாப்பு அச்சுறுத்தலும் உள்ள நிலையில் திங்களன்று மாலை அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்ற கிழக்கின் உதயம் 180 நாள் வேலைத்திட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு வழக்கம்போல் எமக்கு அழைப்பு மாத்திரமே அனுப்பப்பட்டிருந்தது. ஆனால், எமக்கான பாதுகாப்பு எதுவும் செய்து தராத நிலையில் எம்மைப் புறக்கணிக்கும் வகையில் அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது. இது அரசின் நயவஞ்சகத் தன்மையைக் காட்டுவதுடன், கேலிக்கூத்தான செயற்பாடாகவும் உள்ளது.

எமது மாவட்ட மக்களின் பிரச்சினையை மக்கள் பிரதிநிதிகளான எங்களுடன் கலந்தாலோசித்துத் தீர்க்க முடியுமே தவிர, அங்குள்ள அமைச்சர் ஒருவரை மாத்திரம் நம்பி செயற்பட முடியாது. அவருக்கு எமது மக்கள் தொடர்பாகக் கதைப்பதற்கோ, கவனமெடுப்பதற்கோ எந்தவித அருகதையும் கிடையாது. அது மாத்திரமன்றி தமிழத் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பதற்கும் அவருக்கு உரிமை கிடையாது.

அரசின் கபட நாடகத்தை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும் -எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# பாரதி விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றத்தின் பாரதி விழா நேற்று கலாசாலையின் ரதிலக்ஸ்மி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் அ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வண. பேராயர் எஸ்.ஜெபனேசன் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக விகடகவி மு.திருநாவுக்கரசும் கலந்துகொண்டனர்.

பாரதியார் பாடலில் விஞ்சி நிற்பது தேச விடுதலையே, பெண் விடுதலையே என்ற தலைப்புக்களில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கல்வயல் வே. குமாரசாமி தலைமையில் பட்டிமன்றம் இடம்பெற்றது. (202-11)

# வவுனியாவில் கிளைமோர்; இரு பொலிஸார் காயம்

வவுனியா,செப்.12.

வவுனியா - மன்னார் வீதியில், சாளம்பைக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை கிளைமோர்த் தாக்குதல் இடம்பெற்றது.

முற்பகல் 10.40 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பொலிஸ் அதிகாரிகளை இலக்கு வைத்தே இந்த கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

காயமடைந்த இரு பொலிஸாரும் வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-5)

# முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

வடமராட்சி,செப்.12

புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியும் நிலையத் தலைவருமான எஸ்.சிவராசசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் சிதம்பரப்பிள்ளை பசுபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (202-160)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணி மண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் 26ஆம் நாளான இன்று புதன்கிழமை 'தாயிற் சிறந்த தயவான தத்துவன்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நா.நவராஜ் சொற்பொழிவாற்றுவார். நெட்டிலிப்பாய் ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

அத்துடன் மாலையில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய இசை ஆசிரியர் ஸ்ரீராம்குமாரின் நெறிப்படுத்தலில் ஜனனி, ஜெயதரணி சகோதரிகள் இணைந்து நடத்தும் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். (203-79-111)

# விடுதலைப் புலிகள் இப்போது திருமலையில் காடுகளில் இருந்து செயற்படுகின்றனராம்

## கண்காணிப்புக் குழுவுக்கு படையினர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.12

திருமலை மாவட்டத்தில், விடுதலைப் புலிகள் இப்போது காடுகளில் இருந்து தாக்கு தல்களை மேற்கொள்வதாக படைத் தரப்புத் தெரிவித்துள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவலைத் தமக்கு படைத் தரப்பு தந்துள்ளது என்றும் 50 இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் திருகோணமலையில் உள்ளதாக மதிப்பிடப்படுவதாக கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அ-1-5)

# ஜே.வி.பி. மாணவர் அமைப்பின் கறுப்பு வாரப் போராட்டம்

கொழும்பு,செப்.12

கல்வியைத் தனியார் மயமாக்கும் மஹிந்த அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் தொடக்கம் ஜே.வி.பியின் பல்கலைக்கழக மாணவர் அமைப்பினர் 'கறுப்புவாரம்' என்ற போராட் டத்தை நடத்துகின்றனர்.

இது தொடர்பில் ஜே.வி.பியின் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் துமிந்த நகமுவ தகவல் தருகையில் :-

''தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்க அனும திக்கப்படுவதை எதிர்த்து இந்த வாரம் முழுதும் கறுப்புப் பட்டிகள், கொடிகள் ஏந்தி ஆர்ப்பாட்டங்களை நடத்த உள்ளோம் - என்றார்.

இதனிடையே எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் அரசுக்கு எதிராக ஐந்து ஆசிரியர் அமைப்புக்களும் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளன. (சி)

# புதிய மாவட்டம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு ஒருபோதும் இல்லையாம்

## அமைச்சர் கரு ஜயசூரிய கூறுகிறார்

கொழும்பு,செப்.12

''திருகோணமலை மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்கும் எண்ணம் ஒருபோதும் அரசுக்குக் கிடயாது''

- இவ்வாறு அரசின் நிர்வாகத்தறை அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நிர்வாகத்துறை அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையிலான அமைச்சரவைக் குழுவினர் நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர்.

அங்கு சென்ற அவர்கள் சமாதானத்திற்கான பல்சமய ஒன்றியம் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு ஒன்றை நடத்தினர். இதன்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை இச்சந்திப்பில் கலந்து கொண்ட பலர் அமைச்சரவைக் குழுவிடம் புதிய மாவட்டம் உருவாக்கப்படுவதற்கு ஏற்பாடு நடைபெறுவது தொடர்பாகத் தமது அச்சங்களை வெளிப்படுத்தினர்.

புதிய மாவட்டம் உருவாக்குவது தொடர்பாக அரசு எந்தவிதமான முன்னெடுப்புக்களையும் செய்யவில்லை என்று அமைச்சர் குழுவினர் பல் சமய பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளனர் -என்று கூறப்பட்டது. (சி)





இளங்கலைஞர் மன்றத்தின் 'அழகன் முருகன்' காண்பியல் இறுவட்டு விழா நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது. நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் உரையாற்றுவதையும் - இறுவட்டின் முதல்பிரதியை யாழ்.வணிகர் சங்கத் தலைவர்' எஸ்.ஜனக்குமாரிடமிருந்து திருமதி நாகரத்தினம் பெற்றுக்கொள்வதையும் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சிறப்புப் பிரதி வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்- லக்ஸ்மன்)*

# பெருந்திருவிழாப் பக்திப்பாக்கள்

## நல்லூர் வாசனே, வாட்டம் தீர்க்க வாவா!



பல்லவி

*ஈசனே நல்லூர் வாசனே*
*இனிய வேல்முருகா உனைநம்பினேன் வா (ஈசனே)*

சரணம்

*பண்ணினேர் மொழியாள்*
*பாலசுப்பிர மணியா*
*எண்ணும் எண்ணமெல்லாம்*
*நண்ணும் வண்ணம் வாவா (ஈசனே)*

*தாசனான யோக சுவாமி*
*சாற்றும் பாவை*
*கேட்டுக் கிருபை கூர்ந்து*
*வாட்டம் தீர்க்க வாவா! (ஈசனே)*

*- யோகர் சுவாமிகள்*

## கொற்றவேல் உதவாதோ சொல்!

கொடிய தொழு நோய் வந்தே
கொன்றது இரமண ரிஷியை அன்று
கடிதினில் வந்த கான்சர் நோயோ
கவர்ந்தது இராமகிருஷ்ணர் ஆவிதன்னை
இடித்த அப்பசுவால் அன்றோ
இடர்பட்டு யோகர் மாண்டார்
துடித்திட யானை தூக்கி வீச
துடிதுடித்துப் பாரதியும் மாண்டான்
முடிவிலாது அகிம்சைகாத்த அண்ணல்
காந்தியை கோட்சே கொன்றான்
அடித்து பல ஆணி ஏற்றியன்றோ
அருள்மகன் யேசு மாண்டார்
முடிவுதான் என்ன வென்றால்
முழுதுமே முன்வினையே என்பார்
விடிவெமக்கில்லை என்றால்
முன்வினையதும் விதியோ சொல்லு?
கொடிய இவ்வினையை வெல்ல
கொற்றவேல் உதவாதோ! சொல்!

-விகடகவி.

## ஈராறு கண்ணால் பாருமையா!

*சிங்கார வேலா சீர்பெருகு யாழ் நல்லூரையா*
*சீர்வரிசை குவலையத்தில் குலையுதையா*
*பார்முழுதும் புகழ்பூர்த்தவா எம் குறை கேளையா*
*ஊருயிர் ஊசலாடுதையா ஈராறு கண்ணால் பாருமையா!*

- ம.கணேசலிங்கம், *அல்வாய்.*

## திருப்புகழ்

மரகத மயில்மீதே வருவோனே
மனதுக் கிசைந்தவரம் தருவோனே
வரதனே சுடர்வடி வேலவனே எம்
வருத்தமெல்லாம் தீர அருள் வோனே
பிரணவப் பொருளறியாப் பிரமனையே - குட்டி
பிதாவுக் கதையுரைத்த பெருங்குரவா
சரவணப் பொய்கையில் எழுந்தவனே.
சண்முகனே நல்லூர்ப் பெருமானே!

*முதுபெரும் புலவர்* வை.க.சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VANI INTERNATIONAL MARRIAGE BUREAU (VIMB)

திருமுருகனின் திருக்கல்யாண நன்நாளில், இதுவரை எமது ஸ்தாபனத்தால் நிறைவேற்றப்பட்டு திருமண பந்தத்தில் ஈடுபட்டு உள்நாடு உட்பட வெளிநாடெங்கிலும் வாழும் சகல தம்பதிகளையும் நலன் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

## VANI INTERNATIONAL MARRIAGE BUREAU (VIMB)

பலாலி வீதி, (இலங்கை வங்கி- திருநெல்வேலி கிளை முன்பாக) திருநெல்வேலி

Hot Line: 0776184434, 0774047531 மேலும் எல்லா மதத்திலும், சமூகத்திலும் எல்லா நாட்டிலும் (P.R. உடன்) மணமக்கள் தேவைப்படின் எம்முடன் தொடர்புகொள்ளவும். அல்லது புத்தகசாலையில் வெளிவரும் எமது VIMB திருமணக் கையேட்டை ரூபாய் 5/- கொடுத்து வாங்கி விவரங்கள் அறியவும்.

*ஏக விநியோகஸ்தர்:* பூபாலசிங்கம் புத்தகசாலை, இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Email Subanki net @ gmail.Com (64716)


## மண மங்கல நல்வாழ்த்து



இன்று 12.09.2007 புதன்கிழமை செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமண பந்தத்தில் இணையும்

திரு.திருமதி ஆ.நடேசர் தம்பதியரின் செல்வப் புதல்வன் வரதயோகர் (சங்கர்)

திரு.திருமதி க.தியாகராஜா தம்பதியரின் செல்வப் புதல்வி திருமகள்

தம்பதியினரை இல்வாழ்வில் எல்லாச் செல்வங்களையும் பெற்று என்றும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தயா நகைப்பூங்கா
உரிமையாளரும், ஊழியர்களும்.

213 C, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(64669)

## உனது 30 ஆவது வயதில்
## 8 ஆவது ஆண்டு நினைவலைகள்



செல்வன்
**துணசிங்கம் ஞானேந்திரன்**
(கண்ணா)
(உரிமையாளர், கோபிகா ஆடையகம், யாழ்ப்பாணம்)

மனம் மகிழ வந்த நாள்
07.01.1977
மனம் நெகிழச் சென்ற நாள்
10.09.1999

எட்டாவது ஆண்டும் வந்ததோ?
எண்ணி நிதம் ஏங்குகின்றோம்!

தொட்டால் மணக்கும் ஜவ்வாது போல்
எம்மில்லம் முழுதும் மணம் வீசி
சிட்டாய்ப் பறந்து எம் நெஞ்சில் நிறைந்து
ஒளிவீசி நின்ற ஞானேந்திரனே!
எட்டாவது ஆண்டும் வந்ததோ?
எண்ணி நிதம் ஏங்குகின்றோம்!
பட்டான உன்னுடல் விட்டு இன்னுயிர்
பிரிந்து கந்தன் கழல் சேர்ந்ததோ?
இன்று உனது முப்பதாவது வயதில்
உனை நினைந்து இதய அஞ்சலி
செலுத்துகின்றோம்.

அன்பு அப்பா, அம்மா, சகோதரிகள்,
மச்சான், மருமகன்மார், மருமகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள், கோபிகா ஆடையகம்,
ஜெனி ரெக்ஸ்ரைல்ஸ் ஊழியர்கள்.

40/6, புகையிரத கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(64659)

### நவாலியில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை

நவாலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது.

குறிப்பாக இரவு வேளையில் இவைகள் வீதிகளில் சண்டையிடுவதுடன் ஊளையிட்டுகுரைப்பதினால் தற்போதைய சூழ்நிலையில் மக்கள் பலர் பீதியுடன் இருக்க வேண்டியுள்ளது.

மேலும் சிலர் குட்டிகளை எடுத்து வந்து வீதிகளில் விட்டுச் செல்வதால் அவை வீடுகளுக்குள் புகுந்து தொல்லை கொடுப்பதுடன் சில வீதிகளில் இறந்து துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் சுகாதாரத்திற்கு பங்கம் ஏற்படும் அபாயமும் தோன்றியுள்ளது. (202-100)

### மாடுகள் திருட்டு

கரணவாய் வடக்குப் பகுதியில் குறுகிய காலத்தில் இரவு வேளையில் எட்டுக்கு மேற்பட்ட மாடுகள் இனந் தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

திருடப்பட்டுள்ள மாடுகள்ஒவ்வொன்றும் 25 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையிலான பெறுமதி கொண்டன என உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றில் பெரும்பாலானவை கறவைப்பசுக்களாகும்.

இப்பகுதியில் உள்ள கொற்றாவத்தை, சமரபாகு ஆகியஇடங்களிலே மாடுகள் கூடுதலாகத் திருடப்பட்டுள்ளன. (202- 160)

### ஒத்துமாறல்

கொழும்பில் கல்வி கற்பிக்கும் நடன ஆசிரியர் யாழ்ப்பாணத்துக்கு ஒத்துமாற விரும்புகின்றார். (0775406674)
(67405)

### தவறிவிட்டது

குலசிங்கம் பாஸ்கரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (782695240V), விசேட அடையாள அட்டை என்பன மருதனார்மடம் சந்தைக்கும் ஆஞ்சநேயர் கோயிலுக்கும் இடையில் 08.09.2007 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குலசிங்கம் நகுலேஸ்வரி உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார், கோயிலடி, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றனர். (சன்மானம் வழங்கப்படும்).

## மூன்றாம் ஆண்டு நினைவில்

தோற்றம்
03 * 03 * 1908



மறைவு
12 * 09 * 2004

**அமரர் வேலணையூர் அம்பலவாணர் செல்லையா**

(முன்னாள் அதிபர், வேலணை சரஸ்வதி வித்தியாலயம்,
முன்னாள் கிராமசபைத் தலைவர் - வேலணை)

திதி: சதுர்த்தசி 10-09-2007

நீண்டு தொடர்ந்து வந்த நெடியதொரு
கல்வி மரபின் காவலனாய்
வாழ்ந்தவனே!
நல்ல பல காரியங்கள் நாட்டுக்கு
நல்கினையே!
ஆலாய்ப் படர்ந்து நிழல்பரப்பி
வேர்விட்டு விழுதெறிந்து
பாலைவனப் பசுந்தரையாய்ப்
பணிகள் பல புரிந்தவனே!
நீங்கள் மறைந்து ஆண்டுகள் மூன்று
ஆனதுவோ!
உங்கள் நினைவுகளை
என்றும் நினைத்திருப்போம்
இறையருளை வேண்டி நிற்போம்.

*நிரந்தர முகவரி:*
இராச மகால்,
வேலணை கிழக்கு,
வேலணை.

*தற்காலிக முகவரி:*
21,1 / 1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு - 06

நினைவில் வாழும்
குடும்பத்தினர்

## 10 ஆம் ஆண்டு கவிதாஞ்சலி



அன்னை மடியில்
16 . 12 . 1980

ஆண்டவன் அடியில்
02 . 09 . 1997

**செல்வி கவிதா சின்னையா**
திதி: 12.09.2007 பிரதமை

என் வாழ்வின் விடிவெள்ளியாய் என் வயிற்றில் வந்துதித்தாய்
நீ சிரித்துக் கதைத்த அழகு முகம்
இன்னும் எம் கண்களில் இருக்கிறது
நீ நோயினால் அழுது புலம்பிய அந்த ஏக்கம்
எம் இதயத்தை விட்டு அகலாது மகளே கவிதா!
எங்கள் கவிதாவே எம்மைவிட்டு
மரணம் உன்னைப் பிரித்தாலும் ஒருநாள்
உன் மகிமையின் மகத்துவத்தை
கடவுளோடு நாங்கள் காண்போமம்மா கவிதா!
எங்கள் செல்வ மகளே கடைக்குட்டி ராசன்

*என்றும் உன் பிரிவால் வாடும்:*
*அப்பா- அம்மா :* *சின்னையா- சரஸ்வதி*
*அண்ணாமார்:* மாறன், குமார்
*அக்காமார்:* திருமலர், திருமகள், திருவளர்செல்வி
*மைத்துனர்கள் :* நவநீதன், ரூபன், தெய்வேந்திரம்
*மைத்துனிமார் ;* கல்யாணி, சர்மிளா
*பேறாமக்கள் :* திவாகர், சிவன்ஜா, பானுஜா, கஜோல் (ஓவியா), ஆதவன், ஆகாஷ், டிலக்ஸ்ஷன்
*மருமக்கள்:* கவிஷைனா, பிருத்திக்கா.

(64698)

*தகவல்:* **தி.சின்னையா**, 06, நொத்தாரிஸ் லேன், அரியாலை.

## மரண அறிவித்தல்

**மருதயினார் துரைச்சாமி**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட மருதயினார் துரைச்சாமி அவர்கள் (10.09.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மருதயினார்- செல்லமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரி, பிரணவரூபன், தவச்செல்வி, திருவருட்செல்வி, கோணேஸ்வரி, கோகிலவதனி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:* T.P.: *0112330417* *தகவல்:* ந.பாஸ்கரன் (பாபு - *வவுனியா).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை புறக்கணித்து அபிவிருத்தி!

தமிழரின் ஒட்டுமொத்தப் பிரதிநிதித்துவத்தை அடியோடு புறக்கணித்து, கிழக்கில் அபிவிருத்தி என்ற பெயரில் அரசுத் தரப்பு மேற்கொள்ளும் பம்மாத்தும், அதற்கு மற்றொரு சிறுபான்மைத் தரப்பின் பிரதிநிதி கோடரிக் காம்பாகத் துணைபோவதும் வேதனைக்குரியவை என்று தெரிவித்து மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களில் நால்வர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தோர் - கூட்டாக விடுத்திருக்கும் அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கும் கருத்துகள் கவனத்துக்குரியவை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கடந்த பொதுத் தேர்தலில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரி. கனகசபை, கே. தங்கேஸ்வரி, எஸ். ஜெயானந்தமூர்த்தி, பி. அரியநேத்திரன் ஆகிய நால்வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தெரிவான அமைச்சர் அமீர் அலி, நேரத்துடனேயே அணிமாறி, அரசுப் பக்கம் தாவி அமைச்சராக இருக்கின்றார்.

இந்தப் பின்னணியிலேயே தமிழர்களின் மக்கள் பிரதிநிதிகளை ஒதுக்கி, அபிவிருத்தித் திட்டங்களை அரசு கிழக்கில் முன்னெடுக்கின்றது என்ற குற்றச்சாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு எம்.பிக்கள் நால்வரும் கூட்டாக முன்வைத்திருக்கின்றனர்.

★ *மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்கள் நால்வரும் அங்கு தங்கியிருந்து பணிசெய்ய முடியாதவாறு அவர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது.*

★ *ஆயுதக்குழுக்கள் மற்றும் அரச படைகளாலேயே இந்த உயிராபத்து ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.*

★ *போர் நெருக்கடிகள், இராணுவக் கெடுபிடிகள், யுத்த நெருக்கு வாரங்கள் போன்றவற்றுக்குள் சிக்குண்டுள்ள மட்டக்களப்புத் தமிழ்மக்களைச் சென்று, சந்தித்து, இந்த எம்.பிக்கள் ஆவன செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு அரசுத்தரப்பு மறுத்து வருகின்றது. இந்த எம்.பிக்கள் தமது மக்களைச் சென்று சந்திக்க இடமளிக்கக்கூடாது என்பதில் அரசு மிக உறுதியாக இருக்கின்றது.*

★ *இந்த எம்.பிக்கள் தமது தொகுதிகளுக்குச் செல்லவும் தமது மக்களின் நலன்களை நேரடியாகக் கேட்கவும் இடமளிக்காமல் அந்த முயற்சிகளைத் திட்டமிட்டுத் தடுத்துள்ள அரசு, இந்த எம்.பிக்கள் பங்குபற்ற முடியாத நிலையில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தை நடத்தி, தன்னிஷ்டப்படி காய்களை நகர்த்துகின்றது.*

★ *மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் இருந்து 'கிழக்கின் உதயம்' என்ற நாடகத் திட்டத்தின் ஆலோசனை அரங்குகள் வரை சகலவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்களைப் புறக்கணித்தே முன்னெடுக்கப்படுகின்றன.*

- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம். பிக்கள் நால்வரும் கூட்டாக விடுத்த அறிக்கை மூலம் இவ்விடயங்கள் வெளிவந்திருக்கின்றன.

வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள படையினருக்கும் பொலிஸாருக்கும் பாதுகாப்பு இல்லை என்றால் அந்த வழக்குகளைப் பாதுகாப்பான பிற மாவட்டங்களுக்கு மாற்றுகின்றார்கள். - சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்ட ஏனைய தரப்பினரின் பாதுகாப்புக் குறித்துச் சிந்திக்கப்படாமலேயே வழக்குகளை இடம்மாற்று வதற்கான நடைமுறை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நாடாளுமன்றத்தில் இடம்பெற வேண்டிய தெரிவுக் குழுக்கள் மற்றும் அமைச்சுகளின் ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றின் கூட்டங்கள், அவற்றுடன் ஜனாதிபதி சம்பந்தப்பட்டிருந்தால், ஜனாதிபதி தங்கியிருக்கும் அலரி மாளிகைக்கே மாற்றப்படுகின்றன. இக்கூட்டங்களை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடத்தவேண்டும் என்ற ஏற்பாடு மீறப்படுகின்றது.

ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து எம்.பிக்களில் நால்வர் மட்டக்களப்புக்குப் போக முடியாத நிலையில் - அதற்கான பாதுகாப்பு உறுதிப்பாட்டை அரசு வழங்க மறுத்துள்ள சூழலில் - மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தை மட்டும் மட்டக்களப்பில் நடத்துவதில் அரசு விடாப்படியாக நிற்கிறது. எஞ்சியிருக்கும் ஒரேயொரு எம்.பியான அமீர் அலி மட்டும் தாம் அமைச்சர் என்ற பந்தாவில் அங்கு போய் வரும் வாய்ப்பு இருப்பதைப் பயன்படுத்தி, அக்கூட்டத்தை அங்கு கூட்டி, தனித் 'தர்பார்' நடத்துகின்றார்.

அந்த மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள எண்பது வீதப் பிரதிநிதிகளை - அதுவும் அந்த மாவட்டத்தின் பெரும்பான்மை இனப் பிரதிநிதிகளை - ஒரேயடியாகப் புறக்கணித்துவிட்டு, தம்பாட்டில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தைக் கூட்டுவதில் இவ்வளவு பிடிவாதமாக இருப்பதன் மூலம் எதைச் சாதிக்க - நிலைநிறுத்த - பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்கள் அரசுத் தரப்பினர்?

இவ்விடயத்தை சமரசமாக முன்னெடுப்பதற்கு அமைச்சர் அமீர் அலி போன்றோர் முயல்வதே அங்கு இன சௌஜன்யத்துக்கும், நல்லுறவுக்கும், சிறுபான்மை இனத்தவர்களிடையேயான புரிந்துணர்வுக்கும் உதவும்.

அரசுத் தலைமையின் நியாயமற்ற அழுத்தங்களுக்கு அடிபணியாமல், நீதியாகவும், நியாயமாகவும், மனச்சாட்சிக்கு ஏற்பவும், பரந்த பொறுப்புணர்வோடும் செயற்பட முன்வருமாறு அவருக்குச் சுட்டிக்காட்டுகிறோம்.

மட்டக்களப்பின் பிரதான சுதேசிய இனத்தவர்களான தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பரஸ்பரம் புரிந்துணர்வை நிலைநாட்டுவதா அல்லது பகைமையைத் தொடர்ந்து மூட்டுவதா என்பதை அரசியல் தலைவர்கள் நிதானமாகத் தீர்மானிக்க வேண்டும்.

# யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை அனுப்பும் சேவையில் 9 கப்பல்கள்

## தட்டுப்பாடு நீங்கிவிட்டதாக அரசு அறிவிப்பு

கொழும்பு,செப்.12

யாழ்ப்பாணத்துக்கு உணவுப்பொருள்கள் மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்லும் பணியில் இப்போது மொத்தம் ஒன்பது கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. அதனால் அங்கு பொருள்களுக்குத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் இந்த வருட ஓகஸ்ட் வரையான ஒரு வருட காலத்திற்குள் ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 127 மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் - அரசு மேலும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான பொருள்கள் விநியோகம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அத்தியாவசியச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் திவாரட்ண மேற்படி தகவல்களை வெளியிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'ஏ-9' பாதை மூடப்பட்டது முதல் யாழ்ப்பாணத்திற்குப் பொருள்களை கப்பல்கள் மூலம் அனுப்புவது அரசிற்கு மிகவும் கஷ்டமாகவிருந்தது. கப்பல்களைப் பெறுவதில் அரசு கடும் சிரமத்தை எதிர்நோக்கியது.

### 9 கப்பல்கள் இப்போது சேவையில்

புலிகளின் அச்சுறுத்தலின் காரணமாகத் தனியார் வர்த்தகர்களும் கப்பலை வழங்க மறுத்தனர். மிகவும் சிரமத்தின் மத்தியில் குடாநாட்டுக்கு பொருள்களை அனுப்பத் தொடங்கியது அரசு.

இப்போது பொருள் விநியோகத்தில் இருந்த சிக்கல் நீங்கிவிட்டது. அரசிற்குச் சொந்தமான 3 கப்பல்களும் தனியாருக்குச் சொந்தமான 6 கப்பல்களும் யாழ்ப்பாணத்திற்கு பொருள்களைக் கொண்டு செல்கின்றன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவாயிரத்து 500 வர்த்தகர்கள் அங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், பொருட்களுக்குத் தட்டுப்பாடு அங்கு நீங்கியுள்ளது.

2006 ஓகஸ்ட் முதல் இந்த வருடம் ஓகஸ்ட் வரையான ஒரு வருட காலப் பகுதியில் 95 தடவைகள் யாழ்ப்பாணத்திற்குள் கப்பல்கள் சென்று வந்துள்ளன.

அரசிற்குச் சொந்தமான மூன்று கப்பல்கள் 63 தடவைகளும், தனியாருக்குச் சொந்தமான ஆறு கப்பல்கள் 32 தடவைகளும் அங்கு பொருள்களுடன் சென்று திரும்பியுள்ளன.

### ஒரு வருடத்தில் 1, 57, 127 மெ.தொன் அத்தியாவசியப் பொருள்கள் குடாநாட்டுக்கு

இதே ஒரு வருட காலப்பகுதியில் ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 127 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்கள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மாதாந்தம் 33 ஆயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்கள் யாழ்ப்பாணத்திற்குத் தேவைப்படுகின்றன. அத்தேவை இப்போது நிறைவேற்றப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு சிமெந்து எடுத்துச் செல்லத்தடை என்று கூறப்படுகின்றது. அது தவறு. ஆயுதங்களைத் தவிர அனைத்து - எல்லாவகையான - பொருள்களையும் எடுத்துச் செல்லலாம்.

யாழ்ப்பாணத்திற்கு மாதாந்தம் 42 ஆயிரம் சிமெந்து பைக்கெற்றுகள் தேவைப்படுகின்றன. அவற்றை நாம் இன்னும் 10 நாட்களுக்குள் அனுப்பவுள்ளோம்.

இரண்டாயிரத்து 400 மெற்றிக் தொன் அளவுக்கு மூன்று வகையான உரவகைகளையும் நாம் இந்த சிமெந்துக் கப்பலில் அனுப்புகிறோம்.

### விமானம் மூலமும் அனுப்பப்படுகின்றன

கப்பல்களில் மாத்திரமன்றி விமானங்கள் மூலமும் 17 தடவைகள் பொருள்கள் வடக்கே அனுப்பப்பட்டுள்ளன.

340 வகையிலான பொருள்கள் அங்கு தற்போ அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்றவை அங்கு மிகவும் சிறப்பாகவுள்ளன. புதிதாக 33 பஸ்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பு வசதிகள் சீராகவுள்ளன. புதிதாக மூவாயிரம் 'சி.டி.எம்.ஏ.' தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 10 ஆயிரம் 'சி.டி.எம்.ஏ' தொலைபேசிகளை வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்களைப் பொறுத்தவரை இன்னும் 20 நாள்களுக்குத் தேவையான பெற்றோல் ஐந்நூறு பரலும், டீசல் 14 ஆயிரம் லீற்றரும், மண்ணெண்ணைய் 8 ஆயிரத்து 500 லீற்றரும் அங்கு கையிருப்பில் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் இப்போது எல்லா வகையான பொருள்களும் உள்ளன. அங்கு பொருள்களுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது என்று சொல்வதை ஏற்க முடியாது - என்றார். (சி)

# புலிகளின் சர்வதேச ஆயுதக் கொள்வனவுகளுக்கான சூத்திரதாரி 'கே.பி.' தாய்லாந்தில் கைது என அறிவிப்பு

கொழும்பு, செப். 12

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சர்வதேச நிதி சேகரிப்பாளரும், ஆயுத சுவீகரிப்பாளருமான - 'கே.பி.' என அழைக்கப்படும் - குமரன் பத்மநாதன் (வயது - 48) என்பவரை தாய்லாந்துப் பொலிஸார் கைது செய்திருக்கின்றனர் என்று கொழும்பில் அரச படைத்தரப்பினர் நேற்றுத் தகவல் வெளியிட்டனர்.

'இன்டர் போல்' என அழைக்கப்படும் சர்வதேச பொலிஸ் அமைப்பினால் தேடப்பட்டுவரும் கே.பி., கைது செய்யப்பட்டிருக்கின்றமை தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த பலத்த பின்னடைவு என்று சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், புலிகளின் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் ஆகியோருக்கு அடுத்து 'இன்டர் போல்' தேடி வந்த புலிகளின் மூன்றாவது உயர் மட்டத் தலைவர் கே.பியே என்றும் கொழும்புச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

தாய்லாந்துப் பிரஜாவுரிமை பெற்று அங்கு வசித்துவந்த நிலையிலேயே கே.பி. கைதுசெய்யப்பட்டிருக்கின்றார் என இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பல்வேறு நாடுகளில், பல்வேறு பெயர்களில், பல பாஸ்போர்ட்டுகளுடன் கே. பி. இயங்கி வந்தார் என்றும்-

புலிகளின் பெரும்பாலான சர்வதேசக் கொடுக்கல் - வாங்கல்களில் அவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் கூறப்பட்டது.

இவ்விடயம் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து அறிவிப்பு ஏதும் இதுவரை வெளியாகவில்லை.

ஆனால் விடுதலைப் புலிகளின் தலைமையோடு ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இயக்கப் பணியில் இருந்து ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஒதுங்கிக்கொண்ட கே.பி., தாய்லாந்துப் பெண் ஒருவரை மணந்து வாழ்ந்து வந்தார் என முன்னர் செய்திகள் அடிபட்டன.

இதேவேளை - குமரன் பத்மநாதன் ராஜீவ்காந்தி படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்றும், அவர் பாங்கொக்கில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரை இந்தியாவுக்கு நாடு கடத்துமாறு தாய்லாந்து அரசாங்கத்தை சி.பி.ஐ. (புலனாய்வுப் பிரிவு) கேட்கவுள்ளதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

தாய்லாந்தில் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கூறப்படும் கே. பியை தமது அதிகாரிகள் விசாரணை செய்வதற்கான அனுமதியை வழங்கும்படி, தாய்லாந்தை இலங்கை ஏற்கனவே கோரியுள்ளது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. (சி)

## லயன்ஸ் கழகத்தின் தலைமைத்துவக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப். 12

யாழ்.லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் தலைமைத்துவம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு, நாளை வியாழக்கிழமை காலை 8.45 முதல் யாழ்.மானிப்பாய் வீதியில் உள்ள சமுர்த்தி வங்கிக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட [illegible]ரையார் லயன் கே.சிவராஜா [illegible] நடத்தப்படும் இக்கருத்தரங்கு லயன்ஸ் கழக ஆளுநர் லயன் எஸ்.ராகவனின் வழிகாட்டலில் இடம்பெறுகின்றது. (1)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 27 | வியாழக்கிழமை 13.09.2007 |
| திதி : | திருதியை மு.இ. 11.03 |
| நட்சத்திரம் : | சித்திரை முழுவதும் |
| [illegible] | [illegible] - 07.33 |
| [illegible] | 1.33 - 03.03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள் நாளை கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,செப். 12

தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்று சாதனை புரிந்த மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பாடசாலை பழைய மாணவிகள், பெற்றோர், நலன்விரும்பிகளை கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (1)

# தேசிய மட்டப் போட்டிக்கு 167 பேர் நாளையே பயணம்

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றும் யாழ்.மாவட்ட அணிகள் நாளையே புறப்பட உள்ளன.

இந்த அணியினர் இன்று புதன் கிழமை கப்பலில் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

எனினும், நாளையே கப்பல் பயணமாகும் என்றும் நாளை காலை 7 மணிக்கு யாழ்.ரயில் நிலையத்துக்கு வருமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

இந்த அணியில் வலிகாமம் கல்வி வலயத்தை சேர்ந்த 79 வீர வீராங்கனைகளும் 19 ஆசிரியர்களும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 54 வீர வீராங்கனைகளும் 15 ஆசிரியர்களுமாக மொத்தம் 133 வீர வீராங்கனைகளும் 34 ஆசிரியர்களுமாக 167 பேர் பயணத்தை மேற்கொள்கின்றார்கள்.

இந்த அணியில் ஆண்கள் பெண்களுக்கான கரப்பந்தாட்ட அணிகள், மேசைப் பந்து, பூப்பந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் அணிகள் செல்கின்றன.

ஆண்களுக்கான கரப்பந்தாட்ட அணியில் 15 வயதுப் பிரிவில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் 17 வயதுப் பிரிவில் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம் 19 வயதுப் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணிகளும்- பெண்களுக்கான பிரிவில் 15, 17 வயதுப் பிரிவில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயமும் 19 வயதுப் பிரிவில் மல்லாகம் ம.வி. அணிகளும் செல்கின்றன.

மேசைப் பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் - பூப்பந்தாட்டத்தில் ஆண்கள் பெண்கள் பிரிவில் உடுவில் மான்ஸ் ம.வி. அணியும், கிரிக்கெட் போட்டிக்கு யாழ்.இந்துக் கல்லூரி அணியும் செல்கின்றன. (1-86)

## புலிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் கூறிய அவர், இந்தத் தாக்குதல் புலிகளுக்குப் பேரிடியும், பேரிழப்பும் என்றும் குறிப்பிட்டார்.

கடற்படைத் தளபதி செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:-

இப்போதைய தாக்குதல் இலங்கைத்தீவின் தென்முனையில் உள்ள தேவேந்திரமுனைக்கு தென்கிழக்கே சுமார் ஆயிரத்து 200 கிலோ மீற்றர் (சுமார் 700 கடல்மைல்) தொலைவில் வைத்து நடத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கப்பல்கள் பெயரிடப்படாமல், கொடி இல்லாமல், எந்தத் துறைமுகத்திலும் பதிவு செய்யாமலும் கடலில் பயணித்தன.

அவற்றைக் கடந்த இரண்டு வாரங்களாகத் தொடர்ந்து அவதானித்த பின்னரே படையினர் அவற்றில் ஒன்றை நோக்கி திங்கள் காலை 7 மணியளவில் முதலில் எச்சரிக்கை வேட்டைத் தீர்த்தனர்.

அந்தக் கப்பலில் இருந்து திருப்பித் தாக்குதல் நடத்தப்பட்டதால் கடற்சமர் மூண்டது.

அந்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதுடன் கடற்சமர் முடிவுக்கு வந்தது. அதன்பின்னர் திங்கள் மாலையில் அடுத்த கப்பலும் செவ்வாய் அதிகாலை 2 மணியளவில் மூன்றாவது கப்பலும் இதே சூழ்நிலையில் மூழ்கடிக்கப்பட்டன.

இந்தக் கப்பல்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு என பிரத்தியேகமாக குண்டு துளைக்காத வாகனம், பீரங்கிகள், இலகுரக விமானங்கள் மூன்று, மற்றும் அதிவேகத் தாக்குதல் படகுகள், ஆயுதங்கள் போன்றவற்றை புலிகள் எடுத்து வந்தனர் - என்றார்.

ஒவ்வொன்றும் சுமார் எழுபது மீற்றர் (230 அடி) நீளமான இக்கப்பல்கள் 'மயோசி' , 'சிஷின்', 'கோஷ' எனப் பெயரிடப்பட்டிருந்தன என்று தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டார் என இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன. அப்பெயர்கள் புனையப்பட்டவையாக இருக்கலாம் என்றும் கூறப்பட்டது. (அ-சி)

## 5 ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தொழிற் சங்கங்கள் இப் போராட்டம் குறித்து ஆலோசனைகளை நடத்திய போதிலும், அந்த ஆலோசனைகளுக்கு அச் சங்கங்கள் எமக்கு அழைப்பு விடுக்கவில்லை. நாம் இந்தப் போராட்டத்தை அரசியல் மயப்படுத்தப்பட்ட போராட்டமாகவே கருதுகிறோம். அதனால் நாம் இதற்குள் தலையிட விரும்பவில்லை.

அத்துடன், தமிழ் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் - விசேடமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலவி வரும் - போர்ச் சூழல் காரணமாகவும் இடம்பெயர்வுகள் காரணமாகவும் சீரழிந்துள்ளன.

பாடசாலை நாள்கள் இழக்கப்பட்டுள்ளன. இச் சமயத்தில் மேலும் பாடசாலை நாள்களை இழக்க வைக்க நாம் விரும்பவில்லை.

எனவே, நாம் தமிழ் மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் எந்தவொரு போராட்டத்துக்கும் துணைபோக மாட்டோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை -

அடையாள வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ள ஐந்து தொழிற்சங்கங்களும் -

முன்னறிவித்தல் இல்லாமல் வேலைக்கு வராமல் நிற்கும்படியும் -

நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடை ஒருநாள் வேலை நிறுத்தத்துடன் தொடர்பற்றது என்றும் - தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் -

ஐந்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கும் இடையில் நேற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

சம்பள உயர்வு குறித்து இப்பேச்சுக்களில் ஆராயப்பட்டபோதிலும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-11)

## அமைதி முயற்சிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு நான் தயாராக உள் ளேன் - என்றும் அவர் சொன்னார்.

ஊடகவியலாளர் மா நாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இருதரப்பும் தயாரானால் நாங்களும் தயாராக உள்ளோம். ஆனால் இலங்கையில் அமைதியை எங்களால் திணிக்கமுடியாது. நாங்கள் உதவத்தயாராக உள்ளோம்.

ஸ்ரீலங்கா அரசதலைவர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பினருடன் நாங்கள் தொடர்பில் உள்ளோம்.

சமீபகாலமாக போர் நடைபெறுவதால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாகத் தொடர்பெடுத்தல் அரிதாக உள்ளது. அவ்வப்போது நாங்கள் தொலைபேசியில் பேசி வருகிறோம் - என்றார். (அ)

## வட்டக்கச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் முற்றாகப் பாதிக்கப்பட்டன.

'கிபிர்' விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடத்திய சமயம் உளவு விமானம் ஒன்று வானில் வட்டமிட்டுக்கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

A/L PAPER CLASS
IBS கல்வி நிறுவனம்
கண்டுக்குளி.
Wed., Thu., 6.15 - 7.15
Wed., 6.15 a.m

எனினும், இந்த வான் தாக்குதல்களினால் பாரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் கிளிநொச்சியில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## சந்திரிகாவுடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் விருப்பத்தை ஒட்டியே அவரது புதுடில்லி விஜயம் அமைவதாகத் தெரிகின்றது.

பிற நாடு ஒன்றின் முன்னாள் ஜனாதிபதி இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ அடிப்படையில் விஜயம் செய்யும்போது அளிக்கப்படும் சகல வரவேற்பு மரியாதைகளும் உபசாரங்களும் சந்திரிகா குமாரதுங்கவுக்கும் வழங்கப்படும் என புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றும் நாளையும் சென்னையில் தங்கி நிற்கும் சந்திரிகா குமாரதுங்க, நாளை புதுடில்லி பயணமாவார்.

அங்கு அவர் பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுத்துறைச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் உள்ளிட்ட பல தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார்.

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியுடனும் அவர் தனிப்பட்ட பேச்சுகளை நடத்துவார். இலங்கை இனப்பிரச்சினையை ஒட்டிய விடயங்கள் இந்தச் சந்திப்புகளில் பிரதானமாக ஆராயப்படும் என இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் இந்தியா தீர்க்கமான சில முடிவுகளை எடுப்பதற்கு முன்னேற்பாடான கலந்தாலோசனையாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனான சந்திப்பை புதுடில்லி கருதுகின்றது எனத் தெரிகின்றது.

இந்த விவகாரம் தொடர்பாக எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கை பிரதான எதிரணித் தலைவர்கள், தமிழ்த்தேசியத் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோருடனும் புதுடில்லி கலந்தாலோசனை நடத்தும் எனக் கூறப்பட்டது.

எனினும், இவ்விவகாரத்தை ஒட்டி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்குச் செல்வது சில தினங்கள் அல்லது வாரங்கள் தாமதமாகலாம் என்றும் சில வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## மனிதநேயப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டன.

இதேவேளை - படகுப் பயணத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்காக இராமேஸ் வரம் மற்றும் நாகபட்டினம் கடற்கரை யோரங்களில் தமிழகக் காவல்துறையினரும், கடற்படையினரும் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அனைத்து ஏற்பாடு களும் நிறைவடைந்த நிலையில் இன்று புதன்கிழமை திட்ட மிட்டபடி யாழ்.குடா நாட்டுக்கான மனித நேயப் பயணம் முன் னெடுக்கப்படும் என பழ.நெடுமாறன் நேற்று அறிவித்தார். (அ)

## வதிரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுகளுடன் கொள்ளைக் கோஷ்டி ஒன்று அந்தப் பகுதியில் அட்டகாசம் புரிந்ததை அடுத்து இந்த முகாம் அமைக் கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ-1-155)

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு பொன்னுத்துரை



சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு பொன்னுத்துரை 10.09.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மங்களத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சரவணை நாகலிங்கம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் பரிமளகாந்தி (லண்டன்), லோகேஸ்வரி (ஆஸ்திரேலியா), ஆனந்தராஜதுரை (ஜேர்மனி), வசந்தராஜா (லண்டன்), லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி (மன்னாதி), அருந்தவநாதன், ஞானகலை, மஞ்சுளா, சத்தியபாமா ஆகியோரின் அன்பு மாமனும் சிவகாந்தன், கஜேந்திரன், கரன், தரன், தரணி, கபிலன், கோபிநாத், கோபிதாசன், கல்பனா, கெவின், சிவாஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா, நாகம்மா (மட்டுவில்), அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பேரம்பலம், பாக்கியம், சரஸ்வதி, கந்தையா, பரிமளம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2007) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோணாவளை வைரவர் ஒழுங்கை,*
*சாயி தூர்க்கா கோயில் அருகாமை,*
*கொக்குவில் கிழக்கு.*

தகவல்:
ஆனந்தராஜதுரை,
வசந்தராஜா (மகன்மார்).

*T.P. 0094212226403, 0094777047104, 00499115109684, 00442085742593, 00442085547411, 00442085589338.*

### சின்னட்டி இராசதுரை

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி இராசதுரை நேற்று (11.09.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமிர்தராணியின் அன்புக் கணவரும் சத்தியேந்திரா, சத்தியரஜனி, சத்தியமதி ஆகியோரின் தந்தையும் யுவதீசன், சிறிதரன், சுதா ஆகியோரின் மாமனும் சைரன்ஜா, சைரன்ஜன், சாயித்தியன் ஆகியோரின் பேரனும் செல்லத்துரை, வீரசிங்கம், நல்லதம்பி, பழனிராசா, யோகராசா, நாகேஸ்வரி, நல்லம்மா, ஜெகதாம்பிகை, லீலா, லலிதா, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் சகோதரரும் மனோகரன் காலஞ்சென்ற பரமேஸ்வரநாதன், காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (12.09.2007) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிற்சாமம்,*
*சங்கானை மேற்கு,*
*சங்கானை.*

தகவல்:
சிறீதரன் (மருமகன்).

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான
SCC இன் விசேட கணனிப் பயிற்சி நெறிகள்
Special Offer 3000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 3000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
இக்கல்வி ஆண்டில் மிக நவீன கணனித் தொழில்நுட்ப அறிமுகங்களுடன் ஆரம்பமாகும் பயிற்சிநெறிகள்
DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIPLOMA IN COMPUTER SCIENCE
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
New Batches Start On
Batch I :- 09,11.09.2007
Batch II :- 14,15.09.2007
குறைந்த கட்டணம்
அங்கீகாரமுள்ள சான்றிதழ்
இலவசப் பாடநூல்
வரையறையற்ற செய்முறை
குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் உடன் பதிவுசெய்து கொள்ளுங்கள்
Softview Computer College
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170

தற்போது விற்பனையில்

பாக்யா சிறுவர் மாத இதழ்
மாணவர்கள் பயன் பெறும் வகையில் மாதந் தோறும் வெளிவருகின்றது!
கிடைக்கும் இடங்கள்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்.
செல்லாச்சி புத்தகசாலை, பருத்தித்துறை.
மேலதிக தொடர்புகளுக்கு:- 077 3053129

இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தின் விசேட கணனிப் பயிற்சித் திட்டம்.
MCS Supported By UNDP/JRRP
பதிவுகள் 12-09-2007முன் நேரில்
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம்

COMPUTER EXPRESS
Institute of Information Technology
Head Off : 15, Sirambiyadi Lane, Jaffna
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna
T.P:- 021-222 8250, 0777 222422
Diploma in Computerized Accounting...
Quick Book Premier + ACCPAC + MYOB
ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்
வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I : 15/09/2007 Batch II : 16/09/2007
Batch III : 17/09/2007 Batch IV : 20/09/2007
Tally புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது

TITA
Rural IT Training Centre
140 Navalar Road, Jaffna
114 Duch Road, Chavakachchery
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Basic Computer Application
Desktop Publishing
Inter net & e-mail
Online Classes
Certificate Courses
Ms Word XP
Ms Excel XP
Ms Powerpoint XP
Ms Access XP
Adobe Photoshop
Adobe PageMaker
CorelDRAW
Visual Basic 6.0
FrontPage
HTML
புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்
மேலதிக விபரங்களுக்கு நேரில்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org